


06.07.2024

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் மீன் ஏற்றுமதியை 1 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவ்ராஜ்சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

2. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவுத் துறைகள் முக்கிய பங்காற்றுவதாக மத்திய கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. அமித்ஷா குறிப்பிட்டுள்ளார்

3. பகுஜன் சமாஜ் கட்சி மாநிலத்தலைவர் கொலையில் தொடர்புடைய குற்றவாளிகளை சட்டத்தின்முன் நிறுத்த முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் காவல்துறையினருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

4. தமிழ்நாட்டில் காவல்துறையை தமது கட்டுப்பாட்டில் வைக்க முதலமைச்சர் தவறிவிட்டதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

5. இந்திய - ஸிம்பாப்வே அணிகளுக்கிடையிலான முதலாவது 20-20 கிரிக்கெட் போட்டி ஹராரேயில் இன்று நடைபெறுகிறது.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழுழு

சிவ்ராஜ்சிங் சவ்ஹான்

நாட்டில் ஏழைகளின் நலனை உறுதி செய்வதில் பிரதமர் திரு.நரேந்திரமோடி உயர் முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் தெரிவித்துள்ளார்.

சென்னை முட்டுக்காட்டில் உள்ள மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி நிறுவனத்தில் இன்று ஆய்வு மேற்கொண்ட அவர் உற்பத்தியை அதிகரித்தல்,

செலவுகளை குறைத்தல், கடல்வாழ் உயிரினங்களின் நோய்களை தடுத்தல் உள்ளிட்டவற்றில் ஆராய்ச்சிகளின் அவசியத்தை வலியுறுத்தினார்.

43 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான மீன் ஏற்றுமதியை சுட்டிக்காட்டிய அமைச்சர் எதிர்காலத்தில் இது ஒரு லட்சம் கோடி ரூபாய் என்ற அளவை எட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

கடல்வாழ் உயிரினங்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியன் அவசியத்தை எடுத்துரைத்த அவர் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்றார்.

சாமானிய மக்களுக்கான வேலை வாய்ப்பு உணவு பாதுகாப்பு, கல்வி சுகாதாரம் உள்ளிட்டவற்றை மத்திய அரசு தொடர்ந்து வழங்கி வருவதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி 3 நாள் அரசுமுறை பயணமாக ரஷ்யா மற்றும் ஆஸ்திரிய நாடுகளுக்கு நாளைமறுநாள் புறப்படுகிறார்.

22-வது இந்திய - ரஷ்ய வருடாந்திர பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதற்காக ரஷ்ய அதிபர் புதின் விடுத்த அழைபபை ஏற்று ரஷ்யா செல்லும் பிரதமர், அதிபர் புதினுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளையும் மேற்கொள்கிறார்.

தமது ரஷ்ய பயணத்தை முடித்துக்கொண்டு வரும் 9-ம் தேதி ஆஸ்திரியாவிற்கு பிரதமர் செல்கிறார்.

தமது ஆஸ்திரிய பயணத்தின் ஒருபகுதியாக அந்நாட்டு பிரதமர், அதிபர் மற்றும் தொழில் அதிபர்களுடன் பிரதமர் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

கடந்த 41 ஆண்டுகளில் இந்திய பிரதமர் ஒருவர் ஆஸ்திரியாவிற்கு செல்வது இதுவே முதன்முறையாகும்

இப்பயணங்களின் ஒருபகுதியாக இருநாடுகளிலும் வசிக்கும் இந்திய வம்சாவளியினரையும் பிரதமர் சந்தித்து கலந்துரையாடுகிறார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

குடியரசுத்தலைவர்

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு 4 நாள் பயணமாக இன்று ஒடிசா செல்கிறார்.

உலக பிரசித்தி பெற்ற பூரி ஜெகந்நாதர் தேரோட்டத்தில் நாளை பங்கேற்கிறார்.

வரும் திங்கட்கிழமை புவனேஸ்வரில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க உதயகிரி, கந்தகிரி குகைகளை பார்வையிடும் அவர் உத்கல் கலாச்சார பல்கலைகழக மாணாக்கருடன் கலந்துரையாடுகிறார்.

தமது பயணத்தின் இறுதிகட்டமாக புவனேஸ்வர் தேசிய கல்வி அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் 13ஆவது பட்டமளிப்பு விழாவில் குடியரசுத்தலைவர் பங்கேற்கிறார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

அமித்ஷா

சர்வதேச கூட்டுறவு தினம் இன்று கொண்டாடப் படுகிறது

இந்நாளையொட்டி குஜராத் மாநிலம் காந்தி நகரில் நடைபெற்ற கூட்டுறவு நிகழ்ச்சியில் மத்திய கூட்டுறவுத்துசை அமைச்சர் திரு. அமித்ஷா பல்வேறு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

முன்னதாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் கூட்டுறவு பணியாளர்களுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டுள்ளார்

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி அதன் நிலைத்தன்மையை பராமரிப்பதில் கூட்டுறவுத்துறைகள் முக்கிய பங்காற்றுவதாக குறிப்பிட்டார்.

சமச்சீர் வளர்ச்சி என்பது கூட்டுறவுத்துறையின் மேம்பாடு மூலமே உணரப்படும் என்று குறிப்பிட்டார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடியின் சீரிய தலைமையில் கூட்டுறவு அமைச்சகம், சர்வதேச நாடுகளுடன் இணைக்கப்பட்டு சந்தை வாய்ப்புகளையும், படைப்பாற்றல் திறனுடனும், புத்தெழுச்சி உடனும் முன்னேறி செல்வதாக குறிப்பிட்டார்.

நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை கூட்டுறவுத்துறை முக்கிய பங்காற்றுவதாக தெரிவித்துள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

சம்பூர்ணதா

கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன் மலைபகுதி, கரூர் மாவட்டம் தோகைமலை, பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் வட்டங்களில் மத்திய அரசின் சம்பூர்ணதா விழிப்புணர்வு பிரச்சார இயக்கம் இன்று நடைபெறுகிறது.

நாட்டின் 112 மாவட்டங்களின் 500 வட்டங்களில் வரும் செப்டம்பர் 30-ம் தேதிவரை மத்திய அரசு சார்பில் நடைபெற இந்த இயக்கத்தின் கீழ் வட்டார அளவில் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் வகையில் மத்திய அரசின் நல திட்டங்கள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

மாநில செயற்குழு கூட்டம்

தமிழக பி.ஜே.பியின் மாநில செயற்குழு கூட்டம் சென்னையில் இன்று நடைபெற்று வருகிறது.

பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் மத்திய அமைச்சர்கள் திரு. சிவ்ராஜ்சிங் சௌஹான், இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உட்பட பல்வேறு கட்சி நிர்வாகிகள் கலந்துகொண்டுள்ளனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

ஆம்ஸ்ட்ராங்

பகுஜன் சமாஜ் கட்சி மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் குற்றவாளிகளை சட்டத்தின் முன்னிறுத்த காவல் துறையினருக்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் உத்திரவிட்டுள்ளார்.

ஆம்ஸ்ட்ராங் குடும்பத்தினருக்கும் அவரை இழந்துள்ள கட்சியினருக்கும் தமது ஆழ்ந்த இரங்கலை முதலமைச்சர் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

ஆம்ஸ்ட்ராங் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் கடும் கண்டனத்திற்குரியது என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு நிலைமையை இந்த கொலை சம்பவம் பறைசாற்றுவதாக குறை கூறினார்.

காவல்துறையை தமது கட்டுப்பாட்டில் வைக்க முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தவறிவிட்டதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி அன்னாரது மறைவிற்கு கண்டனம் தெரிவித்திருப்பதோடு, மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்நிலையில் ஆம்ஸ்ட்ராம் கொலையில் தொடர்புடைய குற்றவாளிகளை பிடிக்க 10 தனிப்படைகள் அமைக்கப்பட்டு இருப்பதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

பகுஜன் சமாஜ் கட்சி உறுப்பினர்கள் ஆம்ஸ்ட்ராங்கின் உடல் வைக்கப்பட்டுள்ள ராஜீவ்காந்தி பொதுமருத்துவமனை முன்பு இன்றுகாலை ஆர்பாட்டத்தில் ஈடுபட்டதோடு இச்சம்பவத்தில் சிபிஐ விசாரணை கோரியுள்ளனர்.

ஆம்ஸ்ட்ராங்கின் இறுதி சடங்குகள் நாளை சென்னையில் நடைபெற உள்ள நிலையில் கட்சியின் தேசிய தலைவர் செல்வி மாயாவதி அன்னாரது உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்துவார் என தெரிகிறது.

இந்த சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள செல்வி மாயாவதி குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

மக்களவை எதிர்கட்சித்தலைவர் திரு ராகுல்காந்தியும் இச்சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

குற்றவாளிகளை தமிழக அரசு விரைவில் சட்டத்தின் முன் நிறுத்தும் என தாம் நம்புவதாக தமது வலைதளப்பதிவில் தெரிவித்துள்ளார்.

பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களும் ஆம்ஸ்ட்ராங் கொலை சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

விக்கிரவாண்டி

விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலை ஒட்டி வரும் 10ஆம் தேதி விழுப்புரம் மாவட்டத்திற்கு ஊதியத்துடன் கூடிய உள்ளூர் விடுமுறை அறிவித்து அரசு உத்தரவிட்டுள்ளது.

இத்தொகுதியில் வரும் திங்கட்கிழமை மாலையுடன் பிரச்சாரம் முடிவடையும் நிலையில் அரசியல் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

இடைத்தேர்தல் பாதுகாப்பு பணியில் மாநில காவல்துறையுடன் 3 கம்பெனி துணை ராணுவ படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக மாநில தலைமைதேர்தல் அதிகாரி திரு.சத்யபிரதசாகு தெரிவித்துள்ளார்.

வரும் 10ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும் நிலையில் வாக்குகள் 13 ஆம் தேதி எண்ணப்படுகின்றன.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழு

திருவாரூர் - பருத்தி

திருவாரூர் மாவட்டத்தில் பருத்தி கொள்முதல் விலை அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழு

குற்றாலம்

குற்றாலத்தில் வருடாந்திர படகு சவாரியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கமல்கிஷோர் இன்று தொடங்கிவைத்தார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழு

தர்மபுரி

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கன மழை காரணமாக கர்நாடக அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இதனையடுத்து கபிணி அணையிலிருந்து வினாடிக்கு 4 ஆயிரத்து 500 கன அடி நீர் விடுவிக்கப்படுவதால் ஒகேனக்கலில் நீர்வரத்து 4 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

நீர்வரத்து அதிகரித்துள்ளதை அடுத்து பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை அதிகாரிகள் கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

கிரிக்கெட்

இந்திய - ஸிம்பாப்வே அணிகளுக்கிடையிலான முதலாவது 20-20 கிரிக்கெட் போட்டி ஹராரேயில் இன்று நடைபெறுகிறது

ஞாரடிஅயெ புடைட தலைமையில் னுாசரள துரசநடஇ சுரவரசயத புயமைறயனஇ யுடிாளைாநம ஞாயசஅய உள்ளிட்ட இளம் கிரிக்கெட் வீரர்களுடன் இந்திய அணி இத்தொடரில் களமிறங்குகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் 2-வது போட்டி வரும் 7-ம் தேதியும்,

3-வது போட்டி 10ஆம் தேதியும் நடைபெற உள்ளன.

4-வது போட்டி 13ஆம் தேதியும்

5-வது இறுதி போட்டி போட்டி வரும் 14ஆம் தேதியும் நடைபெற உள்ளன.

ழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.